**සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව**
**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment


| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/14//13/Emp. | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ........................................ | දිනය<br>திகதி<br>Date | 2025.10.08 |
|---|---|---|---|---|---|

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,

சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,

சகல பிரதேச செயலாளர்கள்,

சகல பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள்/உதவி சமுர்த்தி பணிப்பாளர்கள் ,

சகல சமுர்த்தி முகாமையாளர்கள்,

சகல விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள்/சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

**<u>சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட அஸ்வெசும பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருட்டு சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தினை அறிமுகப்படுத்துதல்</u>.**

சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் கீழ் அஸ்வெசும சமூக நன்மைகளை பெறுகின்ற பயனாளிகள் மற்றும் சமுர்த்தி நன்மைகளைப் பெற்ற(தற்போது அஸ்வெசும கிடைக்கப் பெறாத) பயனாளிகள் உட்பட குறைந்த வருமானம் பெறும் 2,000,000 குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டிற்குரிய வேலைத் திட்டங்கள் தற்போது மாவட்ட மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி நிதி உதவி வேலைத் திட்டத்தின் கீழ் முன்னோடி கருத்திட்டங்கள் இரண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

02. மேலும் தற்போது தயாரித்துள்ள தேசிய சமூக பாதுகாப்பு மூலோபாய வழியிலிருந்து நாட்டில் மொத்தமாக சமூக பாதுகாப்பு வலைமைப்பினை கட்டியெழுப்புவதற்கான பத்து வருட திட்டத்திற்குறிய (2025 - 2035) அமைச்சரவைத் தீர்மானம் 2025.09.23ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன் இந்த உத்தேச ஓய்வூதிய முறையில் அதற்கு ஓரளவாவது பங்களிப்பினை வழங்கும்.

03. ஐவகை திட்டத்திற்கு அமைய வலுவூட்டும் எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் ஒரு பிரதான துறையானது இப்பயனாளிகளின் பொருட்டு பொருத்தமான சமூக பாதுகாப்பு முறை ஒன்றினை தயாரிப்பதாகும்.

04.இது தொடர்பில் எமது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனம் ஒன்றான இலங்கை சமூக பாதுகாப்புச் சபை அதில் தலையீடுகளை மேற்கொள்வதுடன் அதன் பொருட்டு அமைச்சின் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

05.சமூக பாதுகாப்பு சபையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு வலுவூட்டும் வேலைத் திட்டத்தில் இனம் காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களை தொடர்புபடுத்திக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

06. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் அஸ்வெசும நன்மைகளைப் பெறுகின்ற பயனாளிகள் (முன்னோடி கருத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பயனாளிகளுடன்) மற்றும் சமுர்த்தி நிவாரண உதவியைப் பெற்ற (தற்போது அஸ்வெசும கிடைக்கப்பெறாத) பயனாளிக் குடும்பங்கள் உள்ளடங்கியுள்ள குறைந்த வருமானம் பெரும் குடும்பங்கள் இலக்கு குடும்பங்களாகும் என்பதுடன் அவர்கள் வயது மூப்பு நிலைக்கு உள்ளாகின்ற போது முகம் கொடுக்கும் பல்வேறு சிரமங்களுக்கு ஓரளவாவது நிவாரணத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் இந்த பங்களிப்பு ஓய்வூதியத்திட்டம் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


**1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2869824 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

07. இதற்குரியதாக அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரட்டிய அறிக்கையில் சுய விருப்பத்தின் அடிப்படையில் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பினை வழங்க கூடிய விதம் தொடர்பிலும் தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கையின் பிரதி ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

08. அதற்கஅமைய தற்போதும், எதிர்காலத்திலும் எமது திணைக்களத்தின் ஊடாக நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற இந்த வலுவூட்டல் வேலைத் திட்டத்தில் உள்ளடங்குகின்ற சகல பயனாளிகளையும் இது தொடர்பில் விளக்கம் அளித்து சமூக பாதுகாப்புப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள முக்கியத்துவத்தினை விளக்கிக் கொடுப்பது நம் அனைவரதும் கடமை ரீதியான பொறுப்பொன்றாகும்.

09.மேலும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் மாவட்டங்களில் பணியாற்றுகின்ற அவ் உத்தியோகத்தர்கள் இந்த பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பயனாளிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அதன் பொருட்டு தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு பிரதேச செயலக பிரிவு, கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் கட்டாய நடவடிக்கை ஒன்றாக கருதி நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத் தருகின்றேன்.

சீ.டி.கலுஆரச்சி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர் கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. பொது முகாமையாளர், இலங்கை சமூக பாதுகாப்புச் சபை. - த.கூ.க.பொ மற்றும் உ.ந.பொ
3. சகல பிரிவுத் தலைவர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம். - த.கூ.க.பொ மற்றும் உ.ந.பொ
4. பிரதான உள்ளக கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம். - த.கூ.க.பொ மற்றும் உ.ந.பொ

TRANSLATED BY – M.M.M. JAWHAR (Translator)